# ஆண்டறிக்கை

# 2012

தேசிய கல்வி நிறுவகம்

மகரகம

# தேசிய கல்வி நிறுவகம்
# முன்னேற்ற அறிக்கை - 2012

## 1.0 அறிமுகம்

1985 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின்படி நிறுவப்பட்டுள்ள தேசிய கல்வி நிறுவகம், கீழ்வரும் நோக்கங்களை எய்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

(அ) இலங்கையில் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்பாடுகள் என்பன தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல்;

(ஆ) கல்வியின் பல்வேறு சிறப்புத் துறைகளில் பட்டப்பின் கல்விக்கு ஏற்பாடு செய்தலும் அதனை மேம்படுத்தலும்;

(இ) கல்வி முறைமையின் நிறைவேற்றுகை, இலக்குகள், அமைப்புகள், உள்ளடக்கம், முறைமையியல் என்பன உட்பட கல்வி முறைமையின் மீதும், கல்வியின் சமூக, பொருளாதார மற்றும் ஏனைய அம்சங்கள் மீதுமான கற்கைகளை நடாத்துதலும், மேம்படுத்துதலும்;

(ஈ) கல்விசார் நோக்கங்களுக்காகத் தொழினுட்பவியலின் இசைவாக்கம் உட்பட, கல்வி முறைமை யில் புத்தாக்கப் பயில்வுகளை ஆரம்பித்தலும் மேம்படுத்தலும்;

(உ) கல்வி முறைமையிலுள்ள ஆளணியினரின் உயர் தொழில் தகைமையையும் முகாமைத்துவத் தகைமையையும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்தல்;

(ஊ) கல்வித் துறையில் நிபுணத்துவ சேவைகளை அரசாங்கத்துக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் கிடைக்கச் செய்தல்;

(எ) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல்; அத்துடன்,

(ஏ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைத்தல்.

தேசிய கல்வி நிறுவகமானது பாடசாலை முறைமையினது கலைத்திட்ட அபிவிருத்தி கல்வித் துறையில் ஈடுபட்டவர்களினது வாண்மை விருத்தி, கல்விக் கொள்கைகளை அமுல்படுத்துவதி லுள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்தல் போன்றவற்றிற்கு பொறுப்பாகவிருக்க 1985 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதன்படி உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் கேள்விகளை ஈடுசெய்யக்கூடிய வகையில் தலைமைத்துவத் திற்கான வாண்மை தேர்ச்சிகளை பாடசாலை முறைமைக்கு வழங்கி, விஞ்ஞான ரீதியிலான தகவல்களை வழங்கக்கூடிய ஆய்வுகளுக்கான வழிகாட்டல் மற்றும் கல்வி அபிவிருத்திக்கான கொள்கைகளை உருவாக்க வசதியளிக்கின்றது.

2012 ஆம் ஆண்டின் இந்நிறுவகத்தின் பிரதான இலக்கானது பாடசாலை கலைத்திட்டத்திற்கான உறுதியான அடித்தளங்களை நிறுவி, தற்போதைய கலைத்திட்டத்தினை பகுத்தறிந்து, இற்றைப்படுத்தி, 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து கலைத்திட்டம் தொடர்பான செயற்பாடுகள் யாவும் பிரதானமாக கல்வித்துறை அபிவிருத்தி உதவுத் தொகைகளினூடாகவும் (பாடசாலை கல்வி முறையை நிலைமாற்றும் அறிவுக் கேந்திரத்திற்கான செயற்றிட்டம் - தற்பொழுது) யுனிசெப் என்பவைகளினால் நிதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் 2012 ஆம் ஆண்டில் இவ் ஒதுக்கீடுகள் ஜுன் மாதம் இறுதி வரையில் விடுவிக்கப்படாமலிருந்தது. திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் யாவும் சற்று பின்தங்கியிருந்தன. நிறுவகமானது ரூபா 10 மில்லியன் வருட வருமானங்களை மீளளிப்புச் செய்வதனூடாக கலைத்திட்ட செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தது. தேசிய கல்வி நிறுவகத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நிதி ஒக்டோபர் மாதத்தில் கிடைக்கப் பெற்றதிலிருந்து தனது திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நோக்கி செவ்வனே செயற்பட்டது.

இவ்வருட காலப்பகுதியில் 10185 உள்நாட்டு, வெளிநாட்டு ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிருவாகிகள் பயிற்றுவித்தும், நிறுவகத்தினால் நடத்தப்படுகின்ற பல்வேறு வகையான பாடநெறிகளி லிருந்தான குறிப்பிடத்தக்க வருமானங்கள் மூலம், நிறுவகத்தின் பகுதியளவு செலவினங்கள் ஈடுசெய்யப்பட்டிருந்தது. யுனெஸ்கோவின் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள ஆசிரியர் அபிவிருத்திக்கான தெற்காசிய நிலையமானது தேசிய கல்வி நிறுவகத்தின் முக்கியமான அடைவாகும். கல்விச் சமூகத்தினது வாண்மை விருத்திக்கு பொறுப்பாகவுள்ள தேசிய கல்வி நிறுவகம் இக்காலப் பகுதியில் இந் நிலையத்திற்குத் தேவையான கீழ்க் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து பொருத்தமான பாடநெறிகளை வடிவமைப்புச் செய்வதில் ஈடுபட்டு வந்திருக்கின்றது.

கல்விக் கொள்கைகளை உருவாக்குவதற்கான வசதியளிப்புகளை மேற்கொள்வதற்காக, ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறையானது தற்போதைய கலைத் திட்டக் கொள்கையினை அமுல் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன் தேசிய மட்டத்திலான கொள்கை ஆவண மொன்றையும் தயாரித்திருந்தது.

இதைத்தவிர, வருடாந்த திட்டமிடலுக்கு அப்பாலான தேசிய மட்ட செயற்பாடுகளாகிய பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான கருவிகளை தயாரித்தல், ஜனாதிபதி முன்னெடுப்பிலான வாழ்க்கைத் தேர்ச்சிகளிற்கான ஆங்கில நிகழ்ச்சிகள், பேண்தகு அபிவிருத்திக்கான செயற்பாடுகள், யுனெஸ்கோ வின் விஞ்ஞானத்திற்கான உசாத்துணை நிகழ்ச்சிகள் என்பன இக்காலப் பகுதியில் இடம் பெற்றிருந்தன.

# 2.0 தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவகக் கட்டமைப்பு

## 2.1 நிறுவகப் பேரவை 2012

தேசிய கல்வி நிறுவகத்தின் சட்டத்திற்கமைவாக நிறுவகப் பேரவையானது கீழ்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றது.

- விதந்துரைக்கப்பட்ட விதிகளுக்கமைவாக நிறுவகத்திற்குத் தேவையான ஆட்சேர்ப்புகளைச் செய்தல்.
- ஊழியர்களது கூலிகள், சம்பளங்கள், கொடுப்பனவுகள், நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றைத் தீர்மானித்தல்.
- ஒழுக்க வரன்முறையை தயாரித்தல்.
- ஊழியர்களுக்கான சேமலாபநிதி, ஊழியர் நலன்கள் என்பவற்றை உருவாக்கி அதனை செயற்படுத்தி அந்நிதியங்களுக்குத் தேவையான பங்களிப்பினைச் செய்தல்.

**கீழ்வரும் அங்கத்தவர்கள் 2012 ஆம் ஆண்டு நிறுவகப் பேரவையில் சேவையாற்றினர்.**

**திரு. எச். எம். குணசேகர** — **தலைவர்**
(செயலாளர் - கல்வியமைச்சு) (15-06-2012 வரை)

**திரு. கோத்தாபய ஜயரத்ன** — **தலைவர்**
(செயலாளர் - கல்வியமைச்சு) (19-06-2012 இலிருந்து)

**பேராசிரியர். டப்ளியு. எம். அபேரத்ன பண்டார** — **உறுப்பினர்**
(பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்)

**பேராசிரியர். எஸ். சந்திரசேகரம்** — **உறுப்பினர்**
(முன்னாள் பீடாதிபதி, கல்விப் பீடம் - கொழும்புப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர். அர்ஜுன டி. சில்வா** — **உறுப்பினர்**
(பேராசிரியர், மருத்துவப் பீடம் - களனிப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர். முதியன்சே திசாநாயக்க** — **உறுப்பினர்**
(சிரேஷ்ட பேராசிரியர், பணிப்பாளர் - நுண்கலைப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர். ரொலன்ட் அபயபால** — **உறுப்பினர்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம் - கொழும்புப் பல்கலைக்கழகம்)

**கலாநிதி. டீ. ஏ. பியசிறி** **உறுப்பினர்**
(பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்ப மற்றும் 3 ஆம் நிலைக் கல்வி ஆணைக்குழு)

**திரு. மஞ்சுல மக்கும்பர** **உறுப்பினர்**
(வழக்கறிஞர்)

**திரு. ஆர். உடுவாவெல** **உறுப்பினர்**
(பணிப்பாளர், தேசிய பாதீட்டுத் திணைக்களம்)

**திரு. பி. ரணேபுர** **உறுப்பினர்**
(மேலதிகச் செயலாளர், கல்வி உயர்கல்வி அமைச்சு) (15.08.2011 இலிருந்து)

**கலாநிதி சாரங்க அழகப் பெரும** **உறுப்பினர்**
(வைத்தியர், ஆதார வைத்தியசாலை, கிரிபத்கொடை) (15.08.2011 இலிருந்து)

**திருமதி. வீ. டீ. சீ. பீ. பெரேரா** **(நிறுவகப் பேரவைச் செயலாளர்)**
(பிரதம செயற்றிட்ட அதிகாரி, ஆங்கிலமொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்)

## 2.2 2012 ஆம் ஆண்டின் கல்வி அலுவல்கள் சபை

நிறுவகப் பேரவைக்கு மேலதிகமாக நிறுவகத்தின் சகல கல்வி விடயங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக கல்வி முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் வேறு துறைகளில் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களைக் கொண்ட ஒரு கல்வி அலுவல்கள் சபை செயற்படுவதுடன் இக்கல்வி அலுவல்கள் சபையினால் நிறுவகத்தின் கல்விசார் நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனை, மேற்பார்வை, தலைமைத்துவம் என்பன வழங்கப்படுகின்றன. இக் கல்வி அலுவல்கள் சபையின் பணிகள் பின்வருமாறு:

- அனைத்துக் கல்வி அலுவல்கள் தொடர்பிலும் பேரவைக்கு ஆலோசனைகள் வழங்குதல்.
- கல்வி அலுவல்கள் தொடர்பில் பேரவையினால் விதிக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்து அறிக்கையிடல்.
- நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகள், பயிற்சி வேலைத்திட்டங்கள், பரீட்சைகள் தொடர்பான விதந்துரைகளை நிறுவகப் பேரவைக்கு முன்வைத்தல்.
- பல்வேறு பாடநெறிகளுக்கான ஆட்சேர்ப்பு வரையறைகள், கட்டணங்கள் தொடர்பாகப் பேரவைக்கு விதந்துரைத்தல்.
- பல்வேறு பாடநெறிகளை நடத்துதல், அவற்றுக்கான பரீட்சை சட்டதிட்டங்களை வகுத்தல், மேலும் அனைத்து பயனாளிகள் தொடர்பான விதந்துரைகளை பேரவைக்கு முன்வைத்தல்.
- நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சகர்களாக நியமிப்பதற்குப் பொருத்த மானவர்களின் பெயர்களை பேரவைக்குச் சிபாரிசு செய்து வழங்குதல்.
- கல்வி அலுவல்கள் தொடர்பான புலமைப் பரிசில்கள், பதக்கங்கள், படிகங்களை வழங்குவதுடன் அதற்கான சட்டதிட்டங்கள் தொடர்பாகவும் பேரவைக்கு விதந்துரைத்தல்.
- புலமைப்பரிசில்கள், பரிசுகள், படிகங்கள், பதக்கங்கள் முதலானவற்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தகுதியானவர்களை பேரவைக்குப் பரிந்துரை செய்தல்.
- பேரவையின் அனுமதியுடன் சபைக்குப் பொருத்தமானவர்களை நியமனம் செய்தல்.

**2012 இற்கான கல்வி அலுவல்கள் சபை பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.**

**பேராசிரியர். டப்ளியு. ஆரியதாச டி சில்வா** **தலைவர்**
(முன்னாள் பீடாதிபதி, கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர். டப்ளியு. எம். அபேரத்ன பண்டார** **உறுப்பினர்**
(பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்)

**பேராசிரியர். எஸ். விதான பத்திரன** **உறுப்பினர்**
(விரிவுரையாளர், நுண் உயிரியற் துறை - களனிப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர். நாரத வர்ணசூரிய** **உறுப்பினர்**
(முன்னாள் உபவேந்தர் - சிரேஷ்ட பேராசிரியர்,
ஸ்ரீ ஜயவரத்தனப்புரப் பல்கலைக்கழகம்)

**திரு ஆர். எஸ். மெதகம** **உறுப்பினர்**
(ஓய்வு பெற்ற பணிப்பாளர் நாயகம், கல்விச் சீர்த்திருத்த அமுல்படுத்தல் அலகு, கல்வி அமைச்சு)

**திரு. டப்ளியு. எம். என். ஜே. புஷ்பகுமார** **உறுப்பினர்**
(பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடு, பரீட்சைகள் சேவை)

**திரு. திஸ்ஸ நந்தசேன** **உறுப்பினர்**
(செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

**திரு. வீ. முத்துகுமாரசுவாமி** **உறுப்பினர்**
(முன்னாள் அதிபர், இந்துக் கல்லூரி - கொழும்பு 04)

**திரு. திஸ்ஸ ஹேவாவித்தான** **உறுப்பினர்**
(ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கல்வி அமைச்சு)

**பேராசிரியர். பீ. ஸீ. பி. ஜவ்பர்** **உறுப்பினர்**
(சிரேஷ்ட விரிவுரையாளர் - கல்விப்பீடம், திறந்த பல்கலைக்கழகம்)

**திருமதி. டப்ளியு. பி. ஆர். சில்வா** **உறுப்பினர்**
(உதவி சிரேஷ்ட ஆணையாளர், ஆசிரியர் கல்வி, கல்வி அமைச்சு)

**கலாநிதி (திருமதி). டி. ஏ. ஆர். ஜே. குணசேகர** **உறுப்பினர்**
(உதவிப் பணிப்பாளர் நாயகம், திட்டமிடல், ஆராய்ச்சி ஆசிரியர்க் கல்விப் பீடம், தேசிய கல்வி நிறுவகம்)

**திரு. ஐ. எம். கே. பி. இலங்கசிங்க** **உறுப்பினர்**
(உதவிப் பணிப்பாளர் நாயகம், தலைமைத்துவ அபிவிருத்தி
முகாமைத்துவப் பீடம், தேசிய கல்வி நிறுவகம்)

**கலாநிதி ஜி. கொடிதுவக்கு** **உறுப்பினர்**
(பதில் உதவிப் பணிப்பாளர் நாயகம், மொழிகள், மானுடவியல்
மற்றும் சமூக விஞ்ஞானப் பீடம், தேசிய கல்வி நிறுவகம்)

**திரு. எச். எப். எஸ். பி. ஜெயவர்த்தன** **உறுப்பினர்**
(உதவிப் பணிப்பாளர் நாயகம், விஞ்ஞான தொழில் நுட்பப் பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்)

**திருமதி. வீ. டீ. சீ. பீ. பெரேரா** **உறுப்பினர்**
(பிரதம செயற்றிட்ட அதிகாரி, ஆங்கிலமொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்)

## 2.3 பணிப்பாளர் நாயகத்தின் காரியாலயம்

பணிப்பாளர் நாயகத்தின் செயலகமும் உள்ளகக் கணக்காய்வு அலகும் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது.

பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகமானது நிறுவக பேரவையின் செயற்பாடுகள், கல்வி அலுவல்கள் சபையினதும் செயற்பாடுகளையும் ஒன்றிணைக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் 13 பேரவை கூட்டங்களும் 12 கல்வி அலுவல்கள் சபைக் கூட்டங்களும் இடம்பெற்றன.

உள்ளகக் கணக்காய்வு அலகானது உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதுடன் அகக் கட்டுப்பாடு, வெளிப்படுத்துகை என்பவற்றினூடாக நிறுவக முகாமைக்கு உதவி புரிகின்றது.

## 2.4 பீடங்களும் துறைகளும்

கீழே தரப்படும் பீடங்களினதும் துறைகளினதும் உள்ளடக்கங்களானவை தற்போதைய நிறுவக கட்டமைப்பிற்கமைவானவை. அதற்கமைய 2012 ஆம் ஆண்டில் நிறுவகக் கட்டமைப்பானது கீழ்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

### 2.4.1 மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை
சிங்கள மொழித்துறை
தமிழ் மொழித்துறை
ஆங்கில மொழித்துறை
அழகியற் துறை
சமயங்கள் துறை
சமூகவியற் துறை
மொழி இணைப்பு அலகு

### 2.4.2 விஞ்ஞானத் தொழில்நுட்ப பீடம்

விஞ்ஞானத் துறை

கணிதத் துறை

தொழில்நுட்பக் கல்வித் துறை

வணிகத் துறை

தகவற் தொழில்நுட்பத் துறை மற்றும் கல்வி முகாமைத்துவ தகவல் சேவை

சுகாதாரம் மற்றும் உடற்கல்வி அலகு

### 2.4.3 திட்டமிடல் ஆய்வு மற்றும் ஆசிரியர் கல்வி பீடம்

திட்டமிடல் மதிப்பீட்டுத் துறை

ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறை

ஆசிரியர் கல்வித் துறை

நிறுவன அபிவிருத்தித் துறை

வெளியக வள முகாமைத்துவ அலகு

### 2.4.4 கல்வி தலைமைத்துவ முகாமைத்துவ அபிவிருத்தி பீடம்

வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை

கல்வி நிர்வாக அபிவிருத்தித் துறை

வெளிநாட்டு பாடநெறிகள் அலகு

### 2.4.5 மாற்று கல்விக்கான பீடம்

அச்சக வெளியீடுகள் துறை

பாரம்பரிய, பிறநாட்டு மொழிகள் மற்றும் இரு மொழிக் கல்வித்துறை

வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் அலகு

திறந்த பாடசாலைகள் அலகு

இலத்திரனியல் பரவற் துறை

நூலக வெளியீட்டுத் துறை

உட்படுத்தற் கல்வித் துறை

### 2.4.6 நிர்வாக, நிதி மற்றும் துணைச் சேவைகள் பிரிவு

நிதித்துறை

நிர்வாகத்துறை

பொறியியற் சேவைகள் மற்றும் பராமரிப்புத் துறை

நூலக மற்றும் அரும்பொருட் காட்சியகத் துறை

## 2012 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- தற்போதைய ஆளணியினரின் வாண்மை விருத்திக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன்படி மலேசியா, மலாயா பல்கலைக் கழகத்தில் கலாநிதி பட்டங்கள் இரண்டையும், ஒரு வருட முதுமாணி கற்கை நெறியையும் தொடருவதற்கான வாய்ப்புக்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன் இது தொடர்பான கலந்துரையாடல்கள் GIZ நிறுவனத்துடன் நடைபெற்று வருகின்ற அதேவேளை ஆசிய அபிவிருத்தி வங்கி 06 கலாநிதி பட்டங்களுக்கான அனுசரணையை வழங்குவதற்கு இணங்கிக் கொண்டிருக்கின்றது.

- கல்விசார் பணியினரின் ஆய்வுத் திறன்களையும் உற்பத்தி திறனையும் மேம்படுத்திக் கொள்வதற்கு, கல்வியமைச்சின் EKSP செயற்றிட்டத்தின் கல்வி முகாமைத்துவ நிபுணர் கலாநிதி ரிச்சட் கொன்சலஸனினால் இரண்டு நாள்கள் கருத்தரங்கு நடத்தப்பட்டன.

- ஆறு வருடங்களுக்கு பிறகு தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழா நடத்தப்பபட்டது. 1263 பேருக்கு கல்விமாணி, கல்விமுதுமாணி, பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா முதலிய பாடநெறிகளுக்கான பட்டங்களை, மாலைதீவு மாணவர்கள் உட்பட பெற்றுக் கொண்டனர்.

- வினைத்திறனான கணினி பயன்பாட்டிற்காக கீழ்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
  - நிறுவக ஆளணியினருக்கு உயர்மட்ட கணினி பயிற்சிகளை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
  - துறைகளின் தேவைப்பாட்டிற்கமைவாக கணினிகளை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
  - கணினி பாவனை பற்றி காலத்திற்காலம் பரிசீலனைகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
  - நிறுவனத்திற்குள் கணினி கலாசாரத்தை ஏற்படுத்துவதற்காக ஆவணங்கள் யாவும் இலத்திரன் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
  - தேசிய கல்வி நிறுவக ஊழியர்களின் பொது கணினிப் பாவனைக்காக இடமொன்று ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.
- பரீட்சைகள் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர், தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் முறைமையின் வினைத்திறனை அதிகரித்துக் கொள்வதற்காகச் இணைப்புச் செய்யப்பட்டார்.

- நாட்டின் கல்விசார் ஆளணியினரின் ஆய்வுத்திறன்களை விருத்தி செய்து கொள்வதற்காக வாய்ப்புகள் அளிக்கப்பட்டன.
  - மூன்று நாள்கள் ஆய்வு முறைகள் பற்றி குறுங்காலப் பாடநெறி மீபே நிலையத்தினால் நடத்தப்பட்டன.
  - ஆய்வு அபிவிருத்தி துறையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்குரிய கண்டறிதல்களுடன் அதனை பரவலாக்குவதற்கான நிகழ்வுகள், இரண்டு நாட்களைக் கொண்ட நிகழ்வுகளாக 2012 மார்ச் மாதத்தில் தேசிய கல்வி நிறுவகத்தில் இடம்பெற்றிருந்தது. இதில் தேசிய கல்வி நிறுவகத்தின் ஆளணியினர் மற்றும் பல்கலைக்கழக ஆளணியினர், ஆசிரியர்கள் உட்பட பல வெளிவாரி ஆய்வாளர்களும் பங்கு பற்றியிருந்தனர்.

- ஜனாதிபதி முன்னெடுப்பின் கீழ் வாழ்க்கைத் திறனுக்கான ஆங்கில நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 550 இறுவட்டுகளை தயாரிக்கும் பொறுப்பினை நிறுவகம் கையேற்றிருந்தது. இதன்படி க.பொ.த (சா.த) மாணவர்களுக்கான 50 இறுவட்டுகளும் தரம் 10 மாணவர்களுக்கான 50 கட்புல, செவிப்புலத் தயாரிப்புகளுக்கான அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டிருந்தன.

- யுனெஸ்கோவின் செயற்றிறனான பங்குபற்றுதலுடன் பேண்தகு அபிவிருத்திக்கான தேசிய ஆசிரியர் கையேடொன்று விருத்தி செய்யப்பட்டதுடன், இடைநிலை பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்தினை கற்பிப்பதற்காக, குறைந்த செலவில் விஞ்ஞான உபகரணங்கள் விருத்தி செய்யப்பட்டன.

- 1810 பாடசாலை அதிபர்களுக்கான வாண்மை விருத்தி பயிற்சி நெறிகள் மீபே நிலையத்தின் அதிபர் வாண்மை செயற்றிட்டத்தினூடாகப் பூர்த்தி செய்யப்பட்டன.

- **ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியளிப்பு செயற்றிட்டங்கள்**

  i. EKSP செயற்றிட்டத்தினால் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு கருவிகள், 6-9 வரையான தரங்களுக்காகத் தயாரிக்கப்பட்டன.
  ii. 25 பாடங்களுக்கான ஆரம்ப வரைவுக் கருவிகள் தயாரிக்கப்பட்டன.

- பாரியளவில் தேங்கிக் கிடந்த தேசிய கல்வியியற் கல்லூரிகளின் சான்றிதழ்கள் அக் கல்லூரிகளின் பட்டமளிப்பு விழாக்களில் வழங்குவதற்கு ஏதுவாக தயார்படுத்தப்பட்டிருந்தன.

- முழுப்பாடசாலை முறைமைக்கும் அறிமுகப்படுத்துவதற்கான இலத்திரனியல் கற்றல் முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி க. பொ. த(உ.த) வகுப்புகளுக்கான உணவு விஞ்ஞானம் மற்றும் கணக்கீடு பாடங்களுக்கான 10 கற்றல் சாதனங்கள் வெப்தளத்தில் இணைக்கப்பட்டன.

- நிறுவனம் தனது தொண்டர் சேவைகளை விரிவுபடுத்தி, இலங்கை விமானப்படையினரின் ஆற்றலை விருத்தி செய்வதற்கான உளவியற் பயிற்சிகளையும், வழிகாட்டல் ஆலோசனை பயிற்சிகளையும் 80 பயிற்றுவிப்பு பயிலுனர்களுக்காக வழங்கியிருந்தது.

- கல்வி அமைச்சு, அரச வணிகக் கூட்டுத்தாபனம், எடிசலாட் என்பவற்றின் ஒன்றிணைவுடன் தரமான கற்றல் சாதனங்களை பகிர்ந்தளிப்பதற்கான வெப் பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்களிப்புகளை நல்கியமை.

- இலங்கை மாணவர்களுக்கு பிறநாட்டு மொழிகளைக் கற்பதற்கான வாய்ப்புக்களுக்காக, கீழ்வரும் மொழிகளை கற்பிப்பதற்கான பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.
  - ஜப்பானிய மொழியை பிறநாட்டு மொழியொன்றாக கற்பிப்பதற்கான டிப்ளோமா பாடநெறி.
  - கொரிய மொழியை பிறநாட்டு மொழியொன்றாக கற்பிப்பதற்கான டிப்ளோமா பாடநெறி.

- ‘‘சில பாடசாலைகள் ஏன் பிள்ளைகளின் வாழ்க்கையில் மாறுதல்கள் பலவற்றை ஏற்படுத்து கின்றன? … அதற்காக நாம் செய்ய வேண்டியது பற்றி’’ ஐக்கிய இராச்சியத்தின் டர்ஹம் பல்கலைக்கழகத்தினை சேர்ந்த பேராசிரியர் டேவிட் கலோவேய் என்பவரால், ஆளணியினருக்கு செயலமர்வுகளினூடாக வாய்ப்புகளை வழங்கி, தற்போதைய பாடசாலை முறைமையின் பணிகளை தரமாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

# 4.0 கலைத்திட்ட அபிவிருத்தி

மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடமும் விஞ்ஞான தொழில்நுட்ப பீடமும் நாட்டின் பொதுக் கல்வி தொடர்பான சகல விடயங்களுக்கும் பொறுப்பு வகிக்கின்றது.

மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் கீழுள்ள ஏழு துறைகளினூடாகவும் சுகாதாரமும் உடற்கல்வியும் அலகின் மூலமும் விஞ்ஞான தொழில்நுட்ப பீடத்தின் கீழுள்ள 05 துறைகளின் மூலமும் 2012 ஆம் ஆண்டில் 68 செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

- சமூக, கலாசார, பொருளாதார, தொழில்நுட்பத் தேவைகளுக்குப் பொருத்தமான கலைத் திட்டத்தைத் திட்டமிடல், அபிவிருத்தி செய்தல், நவீனமயப்படுத்தல். கலைத் திட்டடத்தில் புத்தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், அர்த்தமுள்ளதும் செயன்முறையானதுமான கற்றல், கற்பித்தல் செயன்முறைகளுக்காகப் புதிய நுணுக்கங்களை அறிமுகப்படுத்தல்.

- கலைத்திட்டத்தை விருத்திசெய்து அமுல்ப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவோரின் தொழிற் தேர்ச்சியை முன்னேற்றுதல்.

- கல்வியின் தரவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் ஆய்வுகளை அமுல்ப்படுத்துவதற்கான கலைத்திட்ட விருத்தித் தகவல்களை வெளிக்கொணரல்.

- வெற்றிகரமான கற்றல், கற்பித்தல், மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்கான புதிய முறைமைகளை அறிமுகப்படுத்தல்.

- தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம், தேசிய, சர்வதேச மொழிகளுக்குரிய மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.

- பல்லின மக்கள் தொகுதி உள்ளதும், பல்சமய, பல மொழிகளுடையதுமான சமூகத்தின், சமூக, விழுமியங்கள், கலாசாரங்களை விளங்கிக் கொள்வதற்கான தேர்ச்சிகளை மாணவர் களிடையே விருத்தி செய்தல்.

**2012 ஆம் ஆண்டில் கீழ்வரும் அபிவிருத்திகள் இடம்பெற்றன.**

- 46 பாடங்களுக்கான கலைத்திட்டத்தை தயாரிப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப் பட்டன. தரம் 06 மற்றும் தரம் 10 ஆகியவற்றுக்கான பாடத்திட்ட வரைவுகள் பூர்த்தி யாக்கப்பட்டன.

- க. பொ. த. (உ.த) இரசாயனவியல், உயிரியல், பொருளியல், கணக்கீடு பாடங்களுக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் தேவையான மாற்றங்களுடன் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

- தரம் 6 – 9 வரையான வகுப்புகளுக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டு கருவிகள் தயாரிக்கப்பட்டிருந்தன.

- சிங்களம், ஆங்கிலம், கணிதம் மற்றும் பிறையில் பாடங்களைக் கற்பிப்பதற்கான பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

- விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில பாடத்தின் கடினமான எண்ணக்கருக்களை இலகுவாக விளங்கிக் கொள்வதற்காக, 8 மென்பொருட்கள் தயாரிக்கப்பட்டன. இதைத் தவிர 6 - 9 தரங்களுக்குரிய ஆங்கிலம் மற்றும் வரலாறும் புவியலுக்குமுரிய 20 மென்பொருட்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- பிரிவெனா இரு மொழிக் கல்விக்கான கருத்துருவ கட்டமைப்புகளுக்கான ஆரம்ப வரைவுகள் தயாரிக்கப்பட்டன.

- தேசிய கல்வியியற் கல்லூரிகளினது ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்திற்கான 9 கைந்நூல்கள் தயாரிக்கப்பட்டன.

- இரு மொழிக் கல்விக்கான தகவல்களை பரவல் செய்யும் இரண்டு செய்தித்தாள்கள் தயாரிக்கப்பட்டன.

- தெரிந்தெடுக்கப்பட்ட 11 பாடசாலைகளில் இருமொழிக் கல்விக்கான கல்வி நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டன.

- கலைத்திட்டத்தினை முன்னேற்றுவதற்கான பொதுமக்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கான படிவமொன்று வெப் தளத்தில் இணைக்கப்பட்டது

- தற்போதைய கலைத்திட்டத்தினை வினைத்திறனாக அமுல்படுத்துவதற்காக, கலைத்திட்ட சாதனங்களையும், கணிப்பீட்டுக் கருவிகளையும் வெப் தளத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

## 4.1 பாடத்திட்ட மறு சீரமைப்பு

- **கீழ்வரும் பாடத்திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டன.**

| | |
|---|---|
| க.பொ.த (உ/த) கணக்கீடு (ஆ) | தரங்கள் 12 மற்றும் 13 |
| க.பொ.த (உ/த) வணிகக்கல்வி (ஆ) | தரங்கள் 12 மற்றும் 13 |
| க.பொ.த (உ/த) பொருளியல் (ஆ) | தரங்கள் 12 மற்றும் 13 |
| க.பொ.த (உ/த) கணிதம் | தரங்கள் 12 மற்றும் 13 |
| க.பொ.த (உ/த) இணைந்த கணிதம் | தரங்கள் 12 மற்றும் 13 |

தேசிய கல்வியற் கல்லூரிகளுக்கான ஆங்கிலப் பாடத்திட்டம்
(ஆரம்ப கல்வி பாடநெறிகள், இடைநிலைக்குரியப் பாடங்கள்)
ஜப்பானிய மொழியை பிறநாட்டு மொழியொன்றாக கற்பிப்பதற்கான டிப்ளோமா பாடத்திட்டம்.

## 4.2 தயாரிக்கப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் - 2012

- **கீழ்வரும் இரண்டு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டன.**

| | |
|---|---|
| சித்திரம் (த) | தரம் 13 |
| அரபு | தரம் 10 |

## 4.3 தயாரிக்கப்பட்ட வளச் சாதனங்கள்

- **கீழ்வரும் வளச்சாதனங்கள் தயாரிக்கப்பட்டன**

| | |
|---|---|
| தமிழ்மொழி | தரம் 06 |
| செயற்பாட்டை அடிப்படையாக கொண்ட வாய்மொழி | |
| ஆங்கில ஆசிரியர் கைந்நூல் | தரங்கள் 01 மற்றும் 02 |
| விவசாய விஞ்ஞானம் செயன்முறை கையேடு (சி) | தரங்கள் 12 மற்றும் 13 |
| வன் தொழில்நுட்ப வள நூல் (சி/த) | தரம் 12 |
| சிவில் தொழில்நுட்ப உசாத்துணை நூல் (சி/த) | தரம் 13 |
| மின், இலத்திரனியல் மற்றும் | |
| தகவல் தொழில்நுட்ப உசாத்துணை நூல் (சி) | தரம் 13 |
| பொறியியல் தொழில்நுட்ப வள நூல் | தரம் 13 |
| உயிரியல் வளதொழில்நுட்ப வள நூல் (த) | தரம் 13 |
| விவசாய, விஞ்ஞான உசாத்துணை நூல் (த) | தரம் 12 |
| 10 மேலதிக ஆங்கில வாசிப்பு நூல்கள் | தரம் 06 |

(Unity in diversity, Visiting the Moon, Unforgettable Birthday present, Arun , Judgment, The New Pair of Shoes, Chocolates and Potatoes, The Wise Monkey, Long Hair, Mothers & Sons)

- **கீழ்வருவன பிரேரிப்பு பாடநெறிகளுக்காக தயாரிக்கப்பட்ட சாதனங்களாகும்.**

குறுங்கால தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொழில்சார் பாடநெறிக்கான பிரேரனை.
அதேநேர கல்விமாணி பட்டப்படிப்பிற்கான பிரேரனை.
பிறநாட்டு மொழியொன்றாக ஜப்பானிய மொழியினை கற்பிப்பபதற்கான டிப்ளோமா பாடநெறி பிரேரணை.
ஜப்பானிய, கொரிய, சீன மற்றும் ரஷ்ய மொழிகளுக்குறிய டிப்ளோமா பாடநெறிக்கான பிரேரணை.
திட்டமிடப்பட்ட சேவைக்கால ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சி மொடியுல்கள் (பிரதான நிலை 01) சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலம் முதுமாணி கல்வி பாடநெறிக்கான வழிகாட்டி.

- **தயாரிக்கப்பட்ட ஏனைய சாதனங்கள்**

    - பயிற்றப்படாத, பட்டதாரியல்லாத தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் ஆசிரியர் பயிற்சி நெறிகளுக்கான ஒப்படைகள் 2010 - 2012
    - இரு மொழி கல்விக்கான ஆசிரியர் அபிவிருத்தி சாதனங்கள்.
    - தரம் 06 - 09 வரையான மாணவர்களுக்கான தமிழ் பாடல்களின் இறுவட்டுகள்
    - தரம் 06 - 09 வரையான மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான அனர்த்தப் பாதுகாப்பு கல்வித் தொடர்பான ஊடக கைந்நூல்களும் DVD களும் - (சி/த/ஆ)
    - தரம் 08 இன் பாடசாலை மட்ட கணிப்பீட்டிற்கான உதாரணங்களை உள்ளடக்கிய தான கேட்டல் மற்றம் பேச்சு ஆசிரியர் கைந்நூல்.

### 4.4 சேவைக்காலப் பயிற்சிகள்

- 4120 சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்கள், பாடநெறி பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர் களுக்கு தேசிய கல்வி நிறுவகத்தினால் 2012 ஆம் ஆண்டில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

## 5.0 கல்வி தலைமைத்துவ அபிவிருத்தியும் வாண்மை விருத்தியும்

கல்வித் துறையில் உள்ளோர்களின் வாண்மை விருத்தியினை மேம்படுத்துவது நிறுவகத்தின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும். இவ் வாண்மை விருத்தி மகரகம மற்றும் மீபே வளாகங் களில் முதுதத்துவமாணி பட்டம் தொடக்கம் சான்றிதழ் பாடநெறிகளை நடத்துவதன் ஊடாக வசதிப்படுத்தப்படுகின்றது.

மாகாண மட்ட நிலையங்களை தாபிப்பதனூடாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகள் சார்ந்த வளவாளர்களை ஈடுபடுத்துவதனூடாகவும் கல்விமாணி, பட்டப்பின்படிப்பு டிப்ளோமா மற்றும் மேலதிக மொழி விருத்தி பாடநெறிகள் நடத்தப்படுகின்றன.

இவ் விபரங்கள் யாவும் அட்டவணை 1 இல் குறிப்பிடப்படுகின்றன.

| பாடநெறிகள் | பொறுப்பான துறை | அமைவிடம் | பயிலுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **பட்டப்பின் படிப்பு கல்விப் பாடநெறிகள்** | | | |
| கல்வித் தத்துவமாணிப் பாடநெறி | ஆசிரியர்க் கல்வி | தே.க.நி. | 35 |
| கல்வி முதுமாணிப் பாடநெறி | ஆசிரியர்க் கல்வி | தே.க.நி / யாழ்ப்பாண நிலையம் | 189 |
| எம்.எஸ்.சி. கல்வி முகாமைத்துவம் | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 51 |
| **பட்டப்பின் படிப்பு டிப்ளோமாப் பாடநெறிகள்** | | | |
| பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (முழுநேர பாடநெறி) | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 53 |
| பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (பகுதிநேர பாடநெறி) | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 85 |
| பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா | ஆசிரியர்க் கல்வி | தே.க.நி + 35 பிரதேச நிலையங்கள் | 3300 |
| பட்டப்பின் கல்வி பாடசாலை வழிகாட்டல் டிப்ளோமா | ஆசிரியர்க் கல்வி | தே.க.நி. | 31 |
| **பட்டப் பாடநெறிகள்** | | | |
| கல்விமாணி | ஆசிரியர்க் கல்வி | தே.க.நி + 38 பிரதேச நிலையங்கள் | 4500 |
| **டிப்ளோமாப் பாடநெறிகள்** | | | |
| பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 214 |
| இரண்டாம்மொழியாக ஆங்கிலத்தை கற்பிப்பதற்கான டிப்ளோமா | ஆங்கில மொழித்துறை | தே.க.நி. | 29 |
| முன்பிள்ளை பருவ மற்றும் ஆரம்பக் கல்வி டிப்ளோமா | ஆரம்பக்கல்வி | தே.க.நி. | 76 |
| விசேடக் கல்வி டிப்ளோமாப் பாடநெறி | உட்படுத்தற் கல்வி | தே.க.நி. | 53 |
| சைகை மொழி டிப்ளோமா | உட்படுத்தற் கல்வி | தே.க.நி. | 20 |
| பிறநாட்டு மொழியொன்றாக ஜப்பானிய மொழியை கற்பிப்பதற்கான டிப்ளோமா | பாரம்பரிய /பிறநாட்டு மொழிகள் | தே.க.நி. | 30 |
| **சான்றிதழ் பாடநெறிகள்** | | | |
| மேலதிக மொழி விருத்திப் பாடநெறி(ALIC) | ஆசிரியர்க் கல்வி | தே.க.நி + 18 பிரதேச நிலையங்கள் | 750 |
| **குறுங்காலப் பாடநெறிகள்** | | | |
| கல்வி முகாமைத்துவம் தொடர்பான குறுங்காலப் பாடநெறி | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 726 |
| கல்வி ஆய்வு முறைகள் தொடர்பான குறுங்காலப் பாடநெறி | ஆய்வு அபிவிருத்தி | தே.க.நி. | 50 |
| **பிறநாட்டு மாணவர்களுக்கான பாடநெறிகள்** | | | |
| கல்வி முகாமைத்துவமாணி | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 23 |

## 5.1 நிறுவன அபிவிருத்தி

தேசிய கல்வி நிறுவகமானது சேவைக்கு முன்னதான ஆசிரியர்களுக்கான தேசிய கல்வியற் கல்லூரிகளினதும், சேவையிலுள்ள ஆசிரியரகளினது ஆசிரியர் கலாசாலைகளினதும் கலைத் திட்டத்திற்குப் பொறுப்பாக விளங்குகின்றது.

இக்காலப் பகுதியில்,

- நிபுணத்துவ குழுவினரால் தயாரிக்கப்பட்ட பேண்தகு அபிவிருத்திக்கான பயிற்சி கையேட்டினை அடிப்படையாகக் கொண்டு 27 தேசிய கல்வியற் கல்லூரிகளினது விரிவுரையாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- சமூக நல்லிணக்கத்திற்கான சிறந்த செயற்பாட்டு ஆய்வுகள் தெரிவு செய்யப்பட்டன. இவை யாவும் தேசிய கல்வியற் கல்லூரிகளின் விரிவுரையாளர்களின் செயற்படு ஆய்வினை விருத்தி செய்ய உதவியவைகள் ஆகும்.
- தேவை பற்றிய ஆய்வுகளினூடாக ஆரம்ப தரங்களில் ஆங்கிலத்தை கற்பிப்பதற்கான கற்றல், கற்பித்தல் ஆவணம் ஒன்று தயாரிக்கப்பட்டது.
- தேசிய கல்வியற் கல்லூரிகளின் அளவீடு மற்றும் மதிப்பீடு பாடத்திட்டம் திருத்தப்பட்டமை.
- ஆசிரியர் முன்கல்வி தொடர்பிலான பாடநெறிகளின் உள்ளடக்கங்கள், இற்றைப்படுத்தல்கள், தரமுட்டல்கள் என்பவற்றிற்கான கருவிகள் தயாரிக்கப்பட்டன.
- இரண்டாம் தேசிய மொழி தொடர்பில் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் 175 விரிவுரையாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

## 5.2 பரீட்சைகள்

2012 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் துறையை வலுவூட்டுவது நிறுவகத்தின் பிரதான இலக்குகளில் ஒன்றாக இருந்தது. இக்காலப் பகுதியில் கீழ்வரும் முக்கிய நடவடிக்கைகள் நடந்தேறின.

- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பகுதி II பரீட்சை
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (நுழைவுப் பரீட்சை)
- கல்விமாணி பகுதி II பரீட்சை
- கல்விமாணி முகாமைத்துவ பரீட்சை (நான்காம் அரையாண்டு)
- முன்பிள்ளை அபிவிருத்தி டிப்ளோமா பரீட்சை
- பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பகுதி – I
- கல்விமாணி பகுதி – I
- இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்பிப்பவர்களுக்கான டிப்ளோமா பாடநெறியின் இறுதிப் பரீட்சை 2011/ 2012
- பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பகுதி - I
- தடைதாண்டல் பரீட்சை
- கல்விமாணி முகாமைத்துவ பரீட்சை (ஐந்தாம் அரையாண்டு)

என்பன நடத்தப்பட்டன.

# 6.0 மாற்றுக் கல்வி

## 6.1 உட்படுத்தற் கல்வித்துறை

அனைவருக்கும் கல்வி வழங்கும் எண்ணக்கருவினை அமுல்படுத்துவதில் உட்படுத்தற் கல்வித் துறையானது முக்கிய பங்கினை கொண்டுள்ளது. விசேடத் தேவையுள்ள பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியவாறு தற்போதுள்ள கலைத்திட்டத்திற்கு ஏற்றவாறு துறைசார்ந்த ஆசிரியர்களை, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை பயிற்றுவிக்கும் பணிகளோடு உசாத்துணை நூல்களை தயாரித்தல் மற்றும் உட்படுத்தற் கல்வி தொடர்பானதும், சைகை மொழி தொடர்பான பாடநெறி களை நடத்தலும் இத்துறையின் பிரதான பணிகளாகும்.

2012 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் கீழவரும் செயற் பாடுகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

- பிறையில் கல்வி பயிற்சி பொதியில் குறித்தளவான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 90 வளவாளர்கள் இதன் ஊடாக பயிற்றுவிக்கப்பட்டனர்.
- பிறையில் கல்வித் தொடர்பில் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 75 விசேட கல்வி ஆசிரியர்கள் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- கற்றல் இடர்பாடுகளையுடைய பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட பயிற்சி பொதியினூடாக 100 ஆசிரிய ஆலோசகர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- சைகை மொழி மற்றும் விசேட கல்வி பாடநெறி என்பவற்றுக்கான விரிவுரைகளை நடத்துவதற்கு ஒருங்கிணைப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
- விசேட கல்வித்துறையின் தரத்தினை விருத்தி செய்வதற்காக ஆய்வொன்று நடத்தப்பட்டது.
- உட்படுத்தற் கல்வித் தொடர்பான சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டது.

## 6.2 அச்சுப் பதிப்பும் வெளியீடும்

2012 ஆம் ஆண்டில் அச்சுப் பதிப்பும் வெளியீடும் தொடர்பாகக் கீழவரும் செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டன.

- 13 பாடத்திட்டங்கள்
- 08 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள்
- 12 மேலதிக நூல்கள்
- 07 சஞ்சிகைகள்
- 08 பரீட்சைகளுக்கான சான்றிதழ்கள்
- 44 ஏனைய கற்றற் சாதனங்கள்
- 04 மொடியூல்கள்
- 68 மேலதிக வாசிப்பு நூல்கள்
- 07 அழைப்பிதழ்கள்

'வாழ்க்கைத் திறனுக்கான ஆங்கிலம்' செயற்றிட்டத்திற்கான செயற்பாட்டை அடிப்படையிலான ஆரம்ப வகுப்புக்கள் - கட்டம் 1 (தரம் 1-2) நூல்கள் அச்சிடப்பட்டன.

## 6.3 இலத்திரனியில் பரவலாக்கம்

தேசிய கல்வி நிறுவகம் பாடசாலைக்கு வெளியேயுள்ள சமூகத்தினை கற்றலை நோக்கியதாக இட்டுச் செல்வதற்கு முறைசாராத கவர்ச்சிகரமானதும் வினைத்திறனானதுமான கல்வித் தளங் களின் கற்பித்தலுக்கான இலத்திரனியல் சாதனங்களான, தொலைக்காட்சி, வானொலி, இறுவட்டு என்பவற்றை கற்றல்-கற்பித்தல் சாதனங்களாக எடுத்துச் செல்வதற்கு தனது நகர்வினை மேற் கொண்டிருந்தது. இதன்படி கீழ்வரும் செயற்பாடுகள் 2012 டிசம்பர் மாதம் பூர்த்தியாகும் வரை நடந்தேறியிருந்தன.

- 72 நெனச நிகழ்ச்சிகள் ஒளிபரப்பிற்காக தயாரிக்கப்பட்டது.
- 38 நிபுண வாராந்த வானொலி நிகழ்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டன.
- நடப்பு விவகாரங்கள் பற்றிய 35 நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு ‘‘தேசிய சேவையில்’’ ஒலிபரப்புச் செய்யப்பட்டன.
- 1280 ஒலி இழைகள் பதிவிடப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டிருந்தன.

## 6.4 வழிகாட்டலும் ஆலோசனையும்

கல்வி சமூகத்தினது உளவியற் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் அது தொடர்பில் அரப்பணிப்புடன் ஒன்றுபட்டு செயற்படுவதற்காக 2006 ஜுன் மாதத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் பேரவையின் அங்கிகாரத்துடன் வழிகாட்டல் ஆலோசனை அலகு நிறுவப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் இவ்வலகு கீழ்வரும் பணிகளை மேற்கொண்டிருந்தது.

- மாணவர் சமூகத்துக்கு தேவையான தொழில் வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் சேவைகளை வழங்கி வந்திருக்கின்றது.
- 118 பாடசாலை பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் உள்ளக வழிகாட்டல் அமர்வுகள் நடத்தப்பட்டன.
- பாடசாலை மட்டப் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவருவதற்கான 16 இடம் பெயர் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- 06 பொது விரிவுரைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.
- 94 ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு இவ்வலகினால் தயாரிக்கப்பட்ட பயிற்சி கையேட்டினை அடிப்படையாகக் கொண்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- 320 ஆசிரியர்களுக்கு பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

## 6.5 திறந்த கற்றல்

முறைக்கல்வியை பல்வேறுபட்ட காரணங்களினால் தவறவிட்டவர்களின் கற்றல் வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு திறந்த பாடசாலைகள் துறை, தொலைக்கல்விப் பாடநெறிகளினூடாக அதனை மீளவும் வழங்குதவற்காக நிறுவப்பட்டுள்ளது.

இக்கற்பித்தலானது கல்வியை பயில்வு நாடிகளிடையே கொண்டு செல்வதற்காக, தொலைதூர மற்றும் திறந்த கல்வி அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. பயில்வு நாடிகளின் கல்வித் தகைமைகளைக் கருதாது தொழில் அல்லது சமூக தேவைகளுக்கிணங்க தமக்குப் பொருத்தமான கற்றல், கற்றல் முறை, எந்நிலையிலிருந்தும் கற்றலை ஆரம்பித்தல் என்பவற்றை தமக்கேற்றாற் போல் தெரிவு செய்வதற்கான வசதியையும், வாய்ப்பையும் திறந்த பாடசாலைகள் துறை வழங்கி வருகின்றது.

கடந்த வருடத்தில் இந்நிகழ்ச்சித் திட்டங்களினூடாக கீழ்வரும் திறந்த கற்றல் செயற்பாடுகள் நடத்தேறின.

- 2000 பயில்வு நாடிகள் நாடெங்கிலும் உள்ள 34 நிலையங்களில் அடிப்படை மற்றும் இடைநிலை கல்விக்காக தம்மை பதிவு செய்து கொண்டிருந்தனர்.
- குடும்ப சமூக நலக் கல்விக்கானதும் கணிதபாடதிற்கானதுமான 06 தமிழ்மொழி மூலமான மொடியூல்கள் தயார் செய்யப்பட்டன.
- போதனாசிரியர்களின் ஆற்றலை விருத்தி செய்வதற்காக 80 போதனாசிரியர்களுக்கான பயிற்சி செயலமர்வுகள் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன.
- நாடளாவிய ரீதியிலுள்ள பிரதேச நிலையங்களினூடாக பயில்வுநாடிகளுக்கான 33 உசாத்துணை அமர்வுகள் நடத்தப்பட்டன.
- 07 நிலையங்களில் மேற்பார்வை கண்காணிப்பு செயற்பாடுகள் இடம்பெற்றன.

# 7.0 ஆய்வு, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

தரமான கல்வியை நோக்காகக் கொண்டு இயங்கும் தேசிய கல்வி நிறுவகம் கலைத்திட்ட அபிவிருத்தி, வாண்மை விருத்தி, பல்வேறுபட்ட ஆய்வுத் திட்டங்களினூடாக கொள்கைகளை வகுத்தல் போன்றவற்றுக்கு பங்களித்து வருகின்றது. இந்தப் பணிகளானவை ஆய்வு அபிவிருத்தித் துறை மற்றும் திட்டமிடல் மதிப்பீட்டுத்துறை, வெளியுறவு அலகு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 7.1 ஆய்வு அபிவிருத்தி

ஆய்வு அபிவிருத்தித் துறையானது கல்வி ஆய்வினை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தல்; முன்னெடுத்தல்; கலந்துரையாடுவதற்கும் விவரிப்பதற்குமான கல்விப் பிரச்சினைகளுக்கான அடித்தளங்களை நிறுவுதல்; கல்வி ஆய்வுக்கான திறன்களை விருத்தி செய்துகொள்ள முனையும் துறைசார்ந்தவர்களுக்கு பாடநெறிகளை நடாத்தல்; உதவி வழங்குதல்; ஆய்வுத் தகவல்களை பகிரல் போன்ற பிரதான பணிகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த ஆறு மாதங்களில் கீழ்வரும் குறிப்பிடத்தக்க பணிகளை ஆய்வு அபிவிருத்தி துறையானது மேற்கொண்டிருந்தது.

- இலங்கையின் கலைத்திட்ட கொள்கை தயாரிப்பின் பின்னணி ஆவணமாக்கப்பட்டது.
- சிறிய பாடசாலைகளின் செயற்பாட்டு விளைவுகள் பற்றிய இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது.

- கல்வி ஆய்வின் தகவல்களைப் பரவலாககுவதற்காக, மூன்று கல்வி நாளேடுகள் தயாரிக்கப் பட்டன.

- சப்ரகமுவ மாகாணத்தில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறிய பாடசாலைகளில் பயன்படத்தக்கதான வளப்பொதியொன்று விருத்தி செய்யப்பட்டது.

- இலங்கையின் வரலாற்று ரீதியான கல்வி அபிவிருத்தி (1969-2009) நூலின் இரண்டாம் வரைவு தயாரிக்கப்பட்டு மீள கல்வி அலுவல்கள் சபைக்கு அச்சபையின் வேண்டுகோளுக் கிணங்க சமர்பிக்கப்பட்டது.

- கலாநிதி. சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கர அவர்களின் நினைவுப் பேருரையை 1988 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைத்த கலாநிதி ஜி. பி. குனவர்த்தன அவர்களினால் 23 ஆவது நினைவுப் பேருரை 'கன்னங்கரவின் தொலைநோக்கு கல்வி மறுசீரமைப்புக்கான அறைகூவல்கள்' என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்டது.

- SAARC சஞ்சிகையின் 6 ஆம் அலகின் உள்ளடக்கங்கள் பூரணமாகியுள்ளதுடன் அச்சிடலுக் காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 7.2 திட்டமிடலும் மதிப்பீடும்

கிடைக்கக்கூடிய மனித பௌதிக வளங்களை வினைத்திறனாகவும் விளைத்திறனாகவும் பயன்படுத்தி தேசிய இலக்குகளுடன் இணைந்து வகையில் தேசிய கல்வி நிறுவகத்தின் இலக்குகளையும் அடைந்து கொள்ளத்தக்க வகையில் 2012 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகளை திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டு துறை நிறைவேற்றி இருந்தது.

- 2011 ஆம் ஆண்டிற்கான வருடாந்த முன்னேற்ற அறிக்கை தயாரிப்பு.
- 2012 ஆண்டின் தற்போதைய அடைவுகளின் அறிக்கை தயாரிக்கப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டிற்கான செயற்றிட்ட தயாரிப்பு.
- ஒவ்வொரு துறை மற்றும் அலகுகளுக்கும் தேவையான தளபாடம் அலுவலக உபகரணங் களின் பட்டியல்களைத் தயாரித்து, அதனை வழங்கல்துறைக்கு கையளிப்புச் செய்தமை.
- 2013 ஆம் ஆண்டிற்கான பாதீடு தயாரித்தல்.
- 2013 - 2017 வரையான 05 வருடங்களுக்கான தகவல்களை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுடன் ஆரம்பக்கட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.
- தேசிய கல்வி நிறுவகத்தின் பௌதிக, நிதி வளங்களைப் பயன்படுத்தி, தேசிய கல்வி நிறுவகத்தினதும் மாகாணங்களினதும் 2013 ஆம் ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள பாட ரீதியான பயிற்சி நிகழ்ச்சிகளின் அட்டவணை தயாரிக்கப்பட்டன.
- மத்திய வங்கி, கல்வியமைச்சு, தகவல் தொடர்பாடல் நிறுவகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றின் வேண்டுகோளுக்கிணங்க முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
- 2013 - 2017 வரையான ஆண்டுகளுக்கான ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

## 7.3 வெளியுறவு முகவரலகு

வெளியுறவு முகவரலகு, ஆய்வுத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பீடத்தின் கீழ் இயங்கி வருகின்றது. இது ஊழியர் அபிவிருத்திக்கான வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்து வருகின்றது. இதை விட உலக வங்கியினால் ஒருங்கிணைக்கப்படுகின்ற செயற்றிட்டங்களான ESDG, ஆசிய அபிவிருத்தி வங்கியின் EKSP, GIZ நிறுவனத்தின் சமூக நல்லிணக்கம் மற்றும் அனர்த்த அபாய முகாமைத்துவம், யுனிசெப் நிறுவனத்தின் அடிப்படை மற்றும் ஆரம்பக் கல்வி என்பவற்றுக்குப் பொறுப்பாக விளங்கும் அலகாகும். நிதியுதவிகளை பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள தாமதத்தின் காரணமாக வெளிநாட்டு மட்டத்திலான ஆளணி அபிவிருத்தி நிகழ்ச்சிகள் தாமதமாகி யுள்ளபோதிலும் கீழ்வரும் அடைவுகள் 2012 ஆம் ஆண்டில் எய்தப்பட்டன.

- 25 அதிகாரிகளுக்கு வெளியுறவு முகவரலகு செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றில் பங்குபற்றுவதற்கான வெளிநாட்டு வாய்ப்புக்களை வழங்கியிருந்தது.

- GIZ நிறுவனத்தின் நிதியுதவியின் மூலம் ஆளணி அபிவிருத்திக்கான கீழ்வரும் உள்நாட்டு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன.
    - 52 ஆளணியினருக்கு MDF நிபுணர்களின் உதவியுடன் வாண்மை விருத்தி பாடநெறிகள் நடத்தப்பட்டன.
    - அரசாங்க ஊழியர்களுக்கான தேர்ச்சிகளை வழங்குவதனூடாக ஆங்கில பாட நெறியின் மூலம் 22 அதிகாரிகள் பயன்களைப் பெற்றுக் கொண்டனர்.
    - மலேசியா, மலாயா பல்கலைக்கழகத்தின் இணக்கப்பாட்டுடன் 02 கலாநிதி பட்டங்களை பயில்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ள அதேவேளை ஒரு வருடத்தினையுடைய முதுமாணி கற்கை நெறியை ஒழுங்குபடுத்துவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
    - நிறுவகத்தை சேர்ந்த ஒரு அதிகாரி அவுஸ்திரேலியாவில் முதுமாணி பட்டக்கற்கை நெறியினை பயில்வதற்கான புலமைப் பரிசிலினை வெற்றிகொண்டதுடன் அவுஸ்திரேலிய பிலிண்டர்ஸ் பல்கலைக்கழகத்தில் பயில்கின்றார்.

# 8.0 நிர்வாகம், நிதி மற்றும் துணைச்சேவைகள்

நிர்வாகம், நிதி மற்றும் துணைச்சேவைகள் பிரிவின் பணியானது நிதி, பௌதிக, முகாமைத்துவ சேவைகளையும், துணைச் சேவைகளையும், கலைத்திட்ட அபிவிருத்தி, வாண்மை விருத்தி, மாற்றுக் கல்வி, ஆய்வுத் திட்டமிடல் அபிவிருத்தி போன்ற பீடங்களுக்காகப் பெற்றுக் கொடுப்பதாகும். நிர்வாகத் துறையானது நிர்வாகம், நிதி மற்றும் துணைச்சேவைகள் பிரிவின் ஒரு பிரிவாக இயங்கி வருவதுடன் இது சகல நாளாந்த நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குப் பொறுப்பாக உள்ளது. அத்தோடு ஊழியர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கு அவசியமான பயிற்சிகளை உள்நாட்டில் வழங்குகின்றது. நிதித் துறையானது அனைத்துத் தேவை களுக்குமான நிதி வளங்களை வழங்குதல்; வருமானச் செலவின் அறிக்கைகளை நிதிப் பிரமாணங் களுக்கமைய பேணி அறிக்கையிடல் என்பவற்றை மேற்கொள்கின்றது. பொறியியற் துறையானது கல்வி செயற்பாடுகளுக்கு அவசியமான பௌதிகச் சூழலை பேணுவதையும் நிறுவகத்தின் கட்டிட

நிர்மாணம், பேணுகைப்பணிகள், மின்சார, தொலைபேசிச் சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகளுக் கான ஒதுக்கீடுகள், துப்புரவாக்கல், பாதுகாப்புச் சேவைகளை ஒருங்கிணைத்தல் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றது.

## 8.1 நிர்வாகத் துறை

கிட்டிய எதிர்காலத்தில் நிறுவகத்தின் பெரும்பாலான சிரேஷ்ட ஆளணியினர் இளைப்பாற விருக்கையில் நிறுவகத்தின் தரத்தினையும் வெளியீட்டினையும் அதிகரிக்கும் நோக்கத்துடன் கல்வித் துறை சார்ந்த அனுபவம், தரம், வாய்ந்த பணியணியினரை உள்ளீர்த்துக் கொள்ளுதல் நிறுவகத்தின் முக்கியத் தேவையாக உள்ளது. இதனால் தற்போதுள்ள நிறுவக கட்டமைப்பினை மாற்றியமைத்து ஏற்புடைய சம்பளத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிடம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

பணிப்பாளருக்கு குறைந்த எல்லா கல்விசார் அதிகாரிகளும் விரிவுரையாளர்களாகவோ அல்லது கல்வியியலாளர்களாகவோ பதவிப் பெயர்கள் மாற்றியமைப்பதன் ஊடாக சிறந்த தகுதி உடையவர்கள் குறித்த பதவிகளுக்கு உள்ளீர்க்கப்படுவர்.

ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்புத் திட்ட தயாரிப்பும் அங்கீகாரத்துக்காக தற்பொழுது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கீழ்வரும் ஆட்சேர்ப்புகளும் பதவிகளும். 2012 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் பூரணமாக்கப்பட்டிருந்தன.

**பதவியுயர்வுகள்**

செயற்றிட்ட அதிகாரி - 04

**ஆட்சேர்ப்புகள்**

உதவிப் பணிப்பாளர் நாயகம் - 01
பணிப்பாளர் (இணைப்பு) - 01
உதவிச் செயற்றிட்ட அதிகாரி - 01

08 கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கு நிதி உதவிகளும் கற்கை விடுமுறைகளும் வழங்கப்பட்டன.

- 2007 ஆம் ஆண்டிற்கு பிறகு இளைப்பாறிய 78 ஊழியர்கள் வைபவமொன்றினூடாக பாராட்டப் பட்டனர். இந்நிகழ்வில் கௌரவ கல்வி அமைச்சரும் தற்போதைய ஊழியர்களும் பங்குபற்றி யிருந்தனர்.

## 8.2 நிதித்துறை

- நிலையான சொத்துக்களின் பதிவும் மதிப்பீட்டு நடைமுறைகளும் தயாரித்து முடிக்கப்பட்டிருந்தன.

- நிறுவக நிதி நடைமுறைகளை வினைத்திறனான முறையில் மேம்படுத்திக் கொள்வதற்கான புதிய கணினிப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

- 2012 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பு பணிகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன.

## 8.3 பொறியியற் சேவைகள் மற்றும் பேணுகைத் துறை

**2012 ஆம் ஆண்டில் கீழ்வரும் செயற்பாடுகள் நடந்தேறின.**

- எல்லா விடுதிக் கட்டிடங்களும் திருத்தியமைக்கப்பட்டதுடன் வெளிநாட்டு கல்வி நிபுணர்களுக்கும் கல்வியியலாளர்களுக்குமான பிரத்தியேகமான ஒரு பகுதி மறுசீரமைக்கப்பட்டது.

- குறித்த காலப்பகுதி வரை கவனிப்பாரற்றுக் கிடந்த நிறுவகத்தின் கழிவகற்றல் கட்டமைப்பும் நீர் வழங்கல் முறைமையும் திருத்தியமைக்கப்பட்டது.

- தேசிய கல்வி நிறுவகத்தின் நீர் வழங்கல் முறைமை, புதிய கைத்தொழில் வகை குழாயொன்று இணைக்கப்பட்டதனூடாக தரமுயர்த்தப்பட்டது.

- பிரதான கேட்போர் கூடத்திற்கு மத்திய காற்றுச் சீராக்கல் முறைமை இணைக்கப்பட்டது.

- நிறுவகத்திலுள்ள மாநாட்டு மண்டபத்தில் நியம முறையிலான கலந்துரையாடல் முறைமை அறிமுகப்படுத்தபட்டமை.

- தற்போதுள்ள பாதுகாப்பு முறைமையை தரமூட்டுவதற்காக, தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் CCTV ஒளிபட முறைமை தாபிக்கப்பட்டது.

- நிறுவக வாகனத் தொகுதிக்குள் 03 புத்தம் புதிய வாகனங்கள் சேர்க்கப்பட்டமை.

- மீபே நிலையத்தினது தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப ஆய்வுகூடம் மறுசீரமைக்கப்பட்டதுடன், அதனோடு இணைந்த வகையில் 100 கணினிகளுக்கான மின் மற்றும் வலைப்பின்னல் வசதிகளும் அளிக்கப்பட்டன.

- மகரகம மற்றும் மீபே கட்டிடத் தொகுதிகளின் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- பாதுகாப்பு வேலியும், பாதை முறைமையும் மீபே வளாகத்தில் விருத்தியாக்கப்பட்டுள்ளன.

## 8.4 நூலகம்

நிறுவக ஆளணியினரைத் தவிர தேசிய கல்வி நிறுவகத்தின் நூலகமானது பல்கலைக்கழக பணியணியினர்கள், தேசிய கல்வியற் கல்லூரிகளினதும் ஆசிரியர் கலாசாலைகளினதும் பணியணியினர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஏனைய கல்வியலாளர்கள் என்ற வகையில் எல்லோரது கல்வி நோக்கங்களுக்காகவும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 2012 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் நூலக முறைமையின் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக, கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- பின்வரும் நூல்களும் இறுவட்டுகளும் 2012 ஆம் ஆண்டில் புதிதாக நூலகத்திற்காக, சேர்த்துக் கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| புத்தகங்கள் | - | 997 |
| புத்தகங்கள் (நன்கொடைகள் மூலம்) | - | 2450 |
| கலைத்திட்ட சாதனங்கள் | - | 07 |
| கல்வியறிக்கைகள் | - | 71 |
| உள்நாட்டு சஞ்சிகைகள் | - | 05 |
| உள்நாட்டு சஞ்சிகைகள் (நன்கொடைகள் மூலம்) | - | 07 |
| வெளிநாட்டு சஞ்சிகைகள் | - | 04 |
| செய்தித் தாள்கள் (நன்கொடைகள் மூலம்) | - | 15 |
| கல்வித் தகவல்களை உள்ளடக்கிய இறுவட்டுகள் | - | 21 |

- இற்றை நிலைப்படுத்தப்பட்ட தன்னியக்க நூலக தகவல் முறைமை மற்றும் 02 கணினிமயப் படுத்தப்பட்ட தரவு தளங்கள் உருவாக்கப்பட்டன.

- இரண்டு நூலக திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- பாடசாலை நூலகர்களை பயிற்றுவிப்பதற்காக இரண்டு செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனதுஇல / My No: ஈசீ/ஐ/என்ஐஈ/எப்ஏ/2012
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2013 நவம்பர் 15

பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்,

**தேசிய கல்வி நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய கல்வி நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail.: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கல்வி நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான வரைவு நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. கணக்குகள் கணக்காய்வு செய்யப்பட்டதன் பின்னர் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்தன. அவ் ஐயவினாக்களில் ரூபா 32,880,333 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் அக் கணக்கீட்டுக் குறைபாடுகளில் ரூபா 30,311,575 தொகை சீராக்கப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகளுக்குப் புறம்பாக மேலும் இவ்வாறான குறைபாடுகள் இருப்பதனை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் கைதவிர்க்கப்படுவதன் மூலம் ஏற்பட்டிருந்த ரூபா 43,478 தொகையான இலாபத்தை இனங்கண்டு நிதிச் செயலாற்றல் தொடர்பான அறிக்கைக்கு சீராக்கியிருக்கவில்லை.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த காலாவதியான இருப்புக் கணக்கில் ரூபா 2,525,275 தொகையான மீதி எவ்வித அங்கீகாரமும் இன்றி சொத்துக்கள் அகற்றப்படும் இலாப ஒதுக்கக் கணக்கிற்கு சீராக்கப்பட்டதன் காரணமாக அக் கணக்குகளின் மீதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

### 2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டின் போது பாடசாலைகளில் மதிப்பீட்டு வினாத்தாள்கள் அச்சிடுவதற்காக கல்வி அமைச்சிடமிருந்து பெறவேண்டிய ரூபா 3,237,800 தொகை மீளாய்வாண்டின் போது அறவிடப்பட முடியாதிருந்தது.

(ஆ) சேவையை விட்டுச்சென்றிருந்த 04 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 294,722 தொகையான கடன் மீதி 12 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக அறவிட முடியாதிருந்தன.

(இ) கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டிற்கு விடுமுறை பெற்றுச் சென்றிருந்த ஒரு உத்தியோகத்தர் மீண்டும் சேவைக்குச் சமூகமளிக்காத காரணத்தால் இடைநேர் கொடுப்பனவுகளும் வெப்ப உடைக் கொடுப்பனவுமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 60,431 தொகை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிட முடியாதிருந்தது.

2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104 | விபத்து இடம்பெற்ற உடன் உரிய விசாரணை நடைபெற்று நட்டத்தின் அளவு மற்றும் பொறுப்பான உத்தியோகத்தர் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் 03 வாகனங்களுக்கு ஏற்பட்ட 03 விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 14,000,000 தொகையான கணனி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2011 திசெம்பர் 30 ஆம் திகதிய 155 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் சுற்றறிக்கை | அரசாங்க உத்தியோகத்தருக்கு செலுத்தப்படக் கூடிய ஆகக் கூடிய இடர் கடனின் அளவு ரூபா 250,000 வரை வரையறுக்கப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக 53 உத்தியோகத்தர்களுக்காக அந்த எல்லைக்கு மேலதிகமாக ரூபா 3,803,191 தொகையான இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைக்கப்பெற்ற நிதி விளைவு ரூபா 34,626,857 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 41,078,116 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ரூபா 75,704,973 வீழச்சிக்காக செயற்பாட்டு வருமானம் ரூபா 79,905,282 ஆல் குறைவடைந்திருந்தமை முக்கிய காரணமாக இருந்தது.

### 3.2 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினாலே ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்ட நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் கட்டாய சேவை உடன்படிக்கை மீறல் மற்றும் பிணை முறி செலுத்தத் தவறுதல் என்பன தொடர்பாக நான்கு உத்தியோகத்தர்களுக்கு எதிராக ரூபா 10,681,604 கூட்டுத்தொகையான இழப்பீடு கோரி நீதிமன்றங்களில் 04 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) இரு உத்தியோகத்தர்களாலும் ஒரு பயிலுனராலும் மீள சேவையில் அமர்த்தப்படுவதற்காகவும் பாடநெறிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காகவும் நிறுவகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 03 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டின் போது நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 23 பரீட்சைகளில் 10 பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டிற்கு முன்னர் நடாத்தப்பட்ட 13 பரீட்சைகளின் 5 பரீட்சைகளின் பெறுபேறுகள்

வெளியிடப்படுவதற்கு 12 மாதங்களுக்கும் 28 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலதாமதம் ஏற்பட்டிருந்ததுடன் 2012 இன் ஆரம்ப அரையாண்டின் போது நடாத்தப்பட்ட 04 பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 ஏப்ரல் 11 ஆம் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரே செயலமர்விற்காக ரூபா 20,000 ஆகக் கூடிய தொகைக்கு உட்பட்டு பகுதியளவில் முற்பணம் வழங்கப்பட்ட காரணத்தால் 31 சந்தர்ப்பங்களின் போது ரூபா 586,600 கூட்டுத்தொகையான முற்பணத் தொகை செலவிடப்படாது மீண்டும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2007 ஆம் ஆண்டின் போது கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டிற்குச் சென்றிருந்த ஒரு பெண் உத்தியோகத்தர் மீண்டும் சேவைக்குச் சமூகமளிக்காது அவரது கட்டாய சேவைக்கால உடன்படிக்கையை மீறியமையால் ரூபா 353,840 தொகையைத் தண்டப்பணமாகவும் 2 ஆண்டுகள் சம்பளத்துடனான விடுமுறை வழங்கப்பட்டிருந்தமையால் செலுத்தப்பட்ட ரூபா 704,734 தொகையான சம்பளமும் அக்காலப்பகுதியின் போது அப்பெண் உத்தியோகத்தருக்கு நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 122,069 தொகையான செலவினமும் விடுமுறைக் காலம் முடிவுற்று மீள கடமைக்குச் சமூகமளிக்காத காலத்தின் போது ரூபா 154,642 தொகையான சம்பளமும் நிறுவகத்தால் அறவிடப்பட வேண்டியிருந்தது. அம் முழுப்பணமுமான ரூபா 1,335,285 தொகையை அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

**4.3 விளைவற்ற, குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்**

2010 ஆம் ஆண்டின் போது பட்டப்படிப்பற்ற ஆசிரியர் நிலையங்களுக்காக மும் மொழிகளில் அச்சிடப்பட்ட ரூபா 2,111,775 தொகையான நூல்கள் மீளாய்வாண்டின் இறுதி வரை எஞ்சியிருந்தன.

**4.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

மூன்று மாடி விடுதியின் மலசலகூட முறைமையை நிர்மாணிப்பதற்காக திட்டமிடல், அளவீட்டுப் பத்திரம் மற்றும் கேள்வி ஆவணங்கள் தயாரித்தல் ஆகியவற்றிற்காக 2008 ஆம் ஆண்டின் போது ஆலோசனைச் சேவைக் கட்டணமாக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 1,200,949 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 20 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த ஓர் கட்டிடத்திற்கு பாரிய தொகையைச் செலவிட்டு மலசலகூடம், குளியலறை நிர்மாணிக்கப்படுவது காலரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் ஆக்கபூர்வமற்றது எனப் பணிப்பாளர் நாயகத்தால் 2012 யூன் 11 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்ட காரணத்தால் நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,200,949 தொகை விறைவற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.5 தாமதமான செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட நீர்த் தாங்கி 2011 ஆகஸ்ட் 17 ஆம் திகதிக்கு முன்னர் உடைத்து அகற்றப்படுவதற்கான ஒப்பந்தம் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 115,000 இற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஏப்ரல் 10 ஆம் திகதி வரை அந்தச் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய கல்வி நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைப் பகுதிக்கு கம்பியிடப்படுவதற்கான ஒப்பந்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டிற்காக ரூபா 78,650 தொகையான ஆகக் குறைந்த விலையை ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணம்

குறிப்பிடப்படாது இரண்டாவது குறைந்த விலையான ரூபா 91,850 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த விலைக்கு ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாதுள்ளதென ஒப்பந்தக்காரரால் குறிப்பிட்ட காரணத்தால் மீண்டும் கேள்வி கோருவதற்காக கொள்வனவு குழு தீர்மானித்திருந்தது. ஆகையால் உரிய செயற்பாடு கணக்காய்வுத் தினமான 2013 ஏப்ரல் 05 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட முடியாதிருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயற்பாட்டுத் திட்டம்

2012 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டத்தின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டிய செயலமர்வுகளின் எண்ணிக்கை 1194 ஆனதுடன் இதில் 224 செயலமர்வுகள் நடாத்தப்பட முடியாதிருந்தன. விபரம் பின்வருமாறாகும்.

| | **திட்டத்தின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டிய செயலமர்வுகளின் எண்ணிக்கை** | **நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் எண்ணிக்கை** | **நடாத்தப்படாத செயலமர்வுகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| மொழிகள் மனித மற்றும் சமூக விஞ்ஞானப் பிரிவு | 497 | 408 | 89 |
| விஞ்ஞான தொழிநுட்ப பீடம் | 257 | 197 | 60 |
| திட்ட ஆராய்ச்சி மற்றும் ஆசிரியர் கல்வி பீடம் | 110 | 75 | 35 |
| மாற்றுக் கல்வி மற்றும் ஆசிரியர் கல்வி பீடம் | 330 | 290 | 40 |
| | 1,194 | 970 | 224 |

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்கும் இடையே 11 சதவீதம் முதல் 1509 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தியிராமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) சொத்துக்கள் மற்றும் களஞ்சியக் கட்டுப்பாடு
(ஆ) புத்தகங்கள் மற்றும் நூல்களின் அச்சீடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கல்வி நடவடிக்கைகளுக்கான வெளிநாட்டுப் பயணங்கள்
(உ) பரீட்சைகளை நடத்தலும் முடிவுகளை வெளியிடுதலும்
(ஊ) கொள்வனவு

எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*

**தேசிய கல்வி நிறுவகத்தின் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று பற்றி 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) உறுப்புரைகளுக்கமைய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான தெளிவுபடுத்தல் அறிக்கை**

**2.2 காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைப்பு**

**2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

(அ) கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்காய்வு விசாரணைகளினால் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு

| | | |
|---|---|---|
| குறைபாடுகளின் பெறுமதி | ரூபா. | 32,880,333.00 |
| அதன்படி திருத்தியமைக்கப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகளின் பெறுமதி | ரூபா. | 30,311,575.00 |
| சீராக்கப்படாத கணக்கீட்டு குறைபாடுகளின் பெறுமதி | ரூபா. | 2,568,758.00 |
| இதன்படி சீராக்கப்பட முடியாத குறைபாடுகள் பற்றிய விபரம் | | |
| சொத்துக்களின் இலாபம் | ரூபா. | 43,478.00 |
| காலங்கடந்த இருப்புக் கணக்கின் மீதி | ரூபா. | 2,525,275.00 |
| | ரூபா. | 25,568,753.00 |

இக் காசுத்தொகையில் ரூபா 43,478/= ஆன தொகை (ஆ) படி 2013 ஆம் ஆண்டு கணக்குகளினூடாக இணங்கச் செய்யப்பட்டன.
எஞ்சிய தொகையான ரூபா 2,525,275/= தொகை உண்மையாகவே காலங்கடந்த இருப்பாக பதிவழிப்புச் செய்யப்பட்டது. ரூபா 631,444/= ஆகும். மேலும் இது தொடர்பில் பேரவையின் அனுமதியுடன் (369.6.5) பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் கல்விச் செயலாளரினால் அரச நிதித் திணைக்களத்தின் அனுமதியுடன் பெற்றுக் கொள்வதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி எமக்கு கிடைக்கக்கூடிய தகவல்களுக்கமைய 2012 ஆம் ஆண்டின் கணக்குகளினால் திருத்தப்படாத கணக்கீட்டு குறைபாடொன்றாக எடுத்துக் கொள்ளப்பட்ட தொகை ரூபா 674,922/= ஆகும். (ரூபா 43,478 + ரூபா 631,444)

(ஆ) ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன்படி 2013 ஆம் ஆண்டின் கணக்குகளின் படி சீர் செய்யப்படுவதற்கான அறிவுறுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

**தற்போதைய நிலைமை**

2013 ஆம் நிதியாண்டில் குறித்த சீராக்கம் செய்யப்பட்டு இறுதிக் கணக்குகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

(இ) 2002 ஆண்டிலிருந்து முன்கொண்டு செல்லப்படும் இருப்பு மீதியாகும். 2013.01.22 ஆந்திகதி நடைபெற்ற 369 ஆவது நிறுவக பேரவையின் (369.6.5) அனுமதியுடன் இச்சீராக்கம் செய்யப்பட்டது. எவ்வாறாயினும் இது தொடர்பில் கீழ்வரும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

களஞ்சியத்தில் பேணிக் கொள்ளத்தக்க இருப்புமட்டம் தொடர்பிலான அறிக்கையொன்றினை 3 மாதங்களுக்கு ஒரு தடவை தயாரிக்கும்படி களஞ்சியப் பொறுப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் செம்மையினை பரிசீலித்துப் பார்த்த பிறகு குறித்த இருப்பு மட்டத்தை பொருத்தமானவாறு உத்தம மட்டத்தில் பேணிக் கொள்வதற்கும் தேவையில்லாத இருப்பு தேங்கிக் கிடப்பதனை தவிர்த்துக் கொள்ளவும் களஞ்சியப் பொறுப்பாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

இதைத் தவிர களஞ்சிய இருப்பறிக்கை பற்றி விசாரணை செய்ததன் பின்னர் கொள்முதல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கொள்முதல் செயற்பாட்டு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

களஞ்சிய இருப்பு மட்டம் தொடர்பில் முகாமைத்துவ முறைமை யொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (உயர்மட்டம், ஆகக்குறைந்த மட்டம், மறு கட்டளையிடும் மட்டம்) மேலும் ரூபா. 2,525,275 காலங்கடந்த இருப்புத் தொகையை கணக்கு மீதிகளிலிருந்த குறித்த பொருட்கள் நிறுவக பேரவையின் அனுமதியுடன் ஏல விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பொருட்களில் பெரும்பாலானவைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**2.2.2 பெற்றுக் கொள்ளப்பட வேண்டியவை மற்றும் செலுத்தப்பட வேண்டியவை தொடர்பான கணக்குகள்**

(அ) கடந்த வருடம் இடம்பெற்ற செயற்குழு கூட்டத்தின் அறிவுறுத்தல் களுக்கமைய இத்தொகையினை அறவிடமுடியாக் கடனாக பதவழிப்புச் செய்வதற்காக, முகாமைத்தவ சேவைத் திணைக்களத்தின் அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (இணைப்பு 01 மற்றும் 02)

மேலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டவாறு இத்தொகையினை பதிவழிப்புச் செய்வதற்காக, அரச நிதித் திணைக்களத்தின் அனுமதியினை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள கல்விச் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (இணைப்பு 03)

இதை விட முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கும் அரச நிதி திணைக்களத்திற்கும் இது தொடர்பில் அறிவுறுத்துவதற்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (இணைப்பு 04)

**தற்போதைய நிலைமை**

அரச நிதி திணைக்களத்தின் பதிலினைப் பெற்றுக் கொண்ட பின் குறித்த சீராக்கம் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

(ஆ) இது குறித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணைகள் மூன்று அதிகாரிகள் தொடர்புபட்டதாக மாத்திரமேயாகும். இதன் விளக்கங்கள் வருமாறு

**எல். பீ. ஜெயசிங்க - ரூபா 93,674/=**

இவ் உத்தியோகத்தர் பரீட்சை மோசடி செய்தமையால் இவருக்கெதிராக நடைபெற்ற ஒழுக்காற்று விசாரணைகளிலின் பின் இவரை பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன. இப் பரிசீலனைகளிலிருந்து மோசடி செய்தமை தொடர்பில் இவருக்கெதிராக மேல் நிதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கின்படி இவர் குற்றமிழைத்தவராக காணப்பட்டமையால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவரது வயது மற்றும் உடல் நிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு அவரது 05 வருட சிறைத் தண்டனை 03 வருடங்களாக குறைக்கப்படடது. இதைத்தவிர ரூபா. 50,000/= ஐ தண்டப்பணமாக அறவிடுவதற்கும் தண்டனை விதிக்கப்பட்டது. தனது அறவீடுகளாகிய ரூபா. 93,674/= ஐ தொகையினை கீழ்க்குறிப்பிட்டவாறு அறவிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1. அவருக்கு செலுத்தப்படவிருந்த பணிக்கொடையான ரூபா 56,880/= இத்தொகைக்காக ஈடு செய்யப்பட்டது.
2. எஞ்சிய தொகையான ரூபா. 36,794/= அவரது பிணையாளராகிய திரு. ஏ. வீரசிங்க அவர்களின் ஓய்வூதிய பணத்திலிருந்தும் அறவிடுவதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

**தற்போதைய நிலைமை**

திரு. எப். பீ. ஜெயசிங்க அவர்களின் பணிக்கொடை தொகையாகிய ரூபா 56,880/= இலிருந்து ஈடுசெய்யப்பட்டது. எஞ்சிய தொகையாகிய ரூபா 36,794/= பிணையாளராகிய திரு. ஏ. வீரசிங்க அவர்களிடத்திலிருந்து அறவிட்டுக் கொள்வதற்காக 24.12.2013 ஆந் திகதி இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டது. இதற்கு பதிலேதும் கிடைக்காதவிடத்து ஓய்வூதியத் தொகையிலிருந்து அறவிட்டுக் கொள்வதற்கோ வேறு பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலும் அறிவுரைக்கப்பட்டுள்ளது.

**ஜே. ஏ. கே. ஜெயலாலனி - ரூபா 16,667/=**

அனர்த்த கடன் மீதியான ரூபா 16,306 தொகை மற்றும் வட்டித் தொகையாகிய ரூபா. 485.10 தொகை 11.11.1998 ஆந் திகதியிட்ட பற்றுச்சீட்டு இல. 11997 ஊடாக செலுத்தப்பட்டது.
(இணைப்பு 05)

**தற்போதைய நிலைமை**

இத்தொகை அறவிடப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டது (J/E42)

**டி. என். தயமனி - ரூபா 46,056/=**
இந்த உத்தியோகத்தர் சேவையிலிருந்து இடை விலகியுள்ளார். மீளவும் அறவிட்டுக் கொள்வதற்காக, அவரது வதிவிடத்திற்கு சென்றபோது அவரை கண்டு பிடிக்க முடியவில்லை. பிணையாளராகியான ஓய்வூதியதாரரான திருமதி. எஸ். எம். காசிம் அவர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்காக, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறித்த உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**தற்போதைய நிலைமை**
உத்தரவாதியான திருமதி எஸ். எம். காசிம் அவர்களுக்கு இது பற்றி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**கடன் முற்பணம்**
பொதுவான முற்பணங்கள்
**பீ. கே. விஜேகுணவர்த்தன - ரூபா 60,431/=**
இத்தொகையில் ரூபா. 42,988.50, 2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் 2011 ஜூலை மாதம் வரை சீனாவில் இடம்பெற்ற கலாநிதி பட்டப்படிப்பு கற்கை நெறிகளில் பங்குபற்றுவதற்காக வழங்கப்பட்ட அமையச் செலவினங்களுக்கான கொடுப்பனவு களுக்காகும். ரூபா.17,212.50 ஆன தொகை கொடுப்பனவு செய்யப்பட்டது இப்பிராயாணத்திற்கான குளிர்கால ஆடை களுக்காகும். இத்தொகையினை அறவிட்டுக் கொள்வதற்சகான தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறித்த உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. மேலும் ரூபா 230/= தொகையினை கணக்கீட்டுக் கொள்வதான மோசடி இடம் பெற்றதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், இது 2013 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தற்போதைய நிலைமை**
இத்தொகையினை அறவிட்டுக் கொள்வதற்காக, 2013.11.15 ஆந் திகதி சட்ட மா அதிபர் திணைக்களத்திலிருந்து மனு வழங்கப்பட்டுள்ளது.

2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்க செயற்படுத்தப்படாத விடயங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்புபட்டவைகள்

**(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 104**
இது வரை வாகன விபத்துக்கள் 3 தொடர்பில் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நி.பி. 104 பரிசீலனைகள் மேற்கொள்வதற்கான தேவையான மூல ஆவணங்களை நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு தாமதங்கள் நிலவுவதால் பரிசீலனை குழுவொன்றை நியமனம் செய்வதற்கு கால தாமதம் ஏற்பட்டுள்ள போதும் எதிர்காலத்தில் இத்தகைய தாமதங்களைக் குறைத்துக் கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குறித்த உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

இது வரையிலும் இந்த பரிசீலனை முடிவுறுத்தப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகள் ஏற்படாத வகையில் பரிசீலனைகளை துரிதப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (ஆ) திறைசேரி சுற்று நிருபங்கள் | - | ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பில் பிறிதொரு நிலையான சொத்து ஏடொன்று பேணி வரப்படுகின்றது. |

**தற்போதைய நிலைமை**

நிலையான சொத்து ஏடு இற்றை நிலைப்படுத்தப்பட்டு வருகின்றது.

| | | |
|---|---|---|
| (ஆ) திறைசேரி சுற்று நிருபம் | - | தற்போது ரூபா 250,000/= வரையறையுடன் அனர்த்தக் கடன் தொகையினை வழங்கு வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**தற்போதைய நிலைமை**

கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிட்டவாறு ரூபா. 250,000/= க்கு மேல் அனர்த்தக்கடன் வழங்கப்படுவதில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

இந்நிலைமைக்கு ஏதுவான விடயங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு வருமானங்கள் கீழ்வருமாறு குறைவடைந்திருக்கின்றது.

| | | |
|---|---|---|
| திரட்டு நிதி (மீண்டெழும் செலவினங்களுக்காக பெறப்பட்டவை) | ரூபா | 2,462,000.00 |
| வெளிநாட்டு உதவி (யுனிசெப்) | ரூபா. | 2,491,915.19 |
| வெளிநாட்டு உதவி (GIZ) | ரூபா. | 2,026,922.86 |
| ESDG உதவி | ரூபா. | 25,000,000.00 |
| | ரூபா. | 31,980,838.05 |

**வருமானக் குறைவு**

| | | |
|---|---|---|
| பாடநெறிக் கட்டணங்கள் மற்றும் பரீட்சைக்கட்டணக் குறைவு | ரூபா. | 28,431,809.40 |
| பல்வேறு வருமானங்கள் | ரூபா. | 40,783,244.62 |
| வைப்புகள் (உள்நாட்டு) | ரூபா. | 2,118,620.34 |

**செலவின அதிகரிப்புகள்**

| | | |
|---|---|---|
| தேய்வுச் செலவின அதிகரிப்பு | ரூபா. | 6,620,065.06 |
| அச்சு மற்றும் காகிதாதிகள் செலவின அதிகரிப்பு | ரூபா. | 5,122,287.27 |
| விடுதிச் செலவின அதிகரிப்பு | ரூபா. | 7,983,496.35 |
| செயலமர்வு வளவாளர் செலவின அதிகரிப்பு | ரூபா. | 13,459,954.25 |
| செயலமர்வு உபசரணைச் செலவின அதிகரிப்பு | ரூபா. | 2,412,224.66 |
| பரீட்சைச் செலவின அதிகரிப்பு | ரூபா. | 3,467,711.50 |

3.2 **நிறுவனத்திற்கு எதிராக மற்றும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்**

(அ) **780/M - மாவட்ட நீதிமன்றம், நுகேகொட - கே. ஏ. என்டன் குமாரய்யா**
விசாரணைகளை மேற்கொள்வதற்கான மூலாதார ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு காலதாமதம் நிலவுவதால் விசாரணைச் சபையை நியமிப்பதும் காலதாமதமாகியுள்ளது. குறித்த அதிகாரிகளுக்கு காலதாமதங்களை இயலுமான அளவிற்கு தவிர்த்துக் கொள்ளுமாறு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் பிரதான முறைப்பாட்டாளரின் வதிவிடத்தை தேடியறிய முடியாதுள்ளதால் அவரின் பிணையாளராகிய வழக்கின் 2 ஆம் பிரதிவாதியான திருமதி எஸ். எம். காசிம் அவர்களிடம் ரூபா. 2,237,337.05 தொகையினை பெற்றுக் கொள்வதற்கான வழக்குத் தீர்ப்பினை அமுலாக்குவதற்கு நீதிமன்றத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளதுடன் இவ் வழக்கின் தீர்ப்பினை நீதிமன்றத்தின் பிடிவிறாந்து பிறப்பிப்பவர்களால் 2 ஆம் பிரதிவாதியிடம் கையளிப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**
இவ்வழக்கின் பயிலுனராகிய பிரதான முறைப்பாட்டாளரின் வதிவிட முகவரியை தேடியறிய முடியாதுள்ளதால் அவரது பிணையாளராகிய 2 ஆவது பிரதிவாதியான திருமதி. எஸ். எம். காசிம் அவர்களிடமிருந்து ரூபா. 2,237,337.05 ஆகிய தொகையை பெற்றுக்கொள்வதற்காக வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**4801/05/M - மாவட்ட நீதிமன்றம், கல்கிசை**
**- எஸ். எம். ஜே செனவிரத்ன**
இவ்வழக்கின் முறைப்பாட்டாளர் மற்றும் பிணையாளர் இருவரும தமது நாட்டினை விட்டு வெளியேறியிருப்பதால் அவர்களை தேடிக் கண்டுபிடிப்பதற்கு குறித்த பிரதேசத்தின் பொலிஸ் மற்றும் பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த முகவரியில் அவர்களது வதிவிடத்தை தேடியறிய முடியாதுள்ளதாக தெரிய வந்துள்ளது. இவ்வழக்கு தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டள்ளது.

**தற்போதைய நிலைமை**
அவர்கள் தற்பொழுது வெளிநாட்டில் வதியும் முகவரியினை தேடியறிவதற்கு அமெரிக்காவின் இலங்கைத் தூதுவராலயத்திற்கு அறிவுறுத்தல் வழங்ப்பட்டுள்ள போதும் அவர்களை தேடியறிய முடியாதுள்ளது. இவ்வழக்கு தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**7018/M - மாவட்ட நீதிமன்றம், கல்கிசை - ஏ. பீ. எஸ். எஸ். பதிரண**
இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கிற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தமையினால் உத்தரவு மற்றும் எதிர்கால விசாரணைகளுக்காக 2013.11.11 அன்று அழைக்கப்படவிருக்கின்றது.

**தற்போதைய நிலைமை**
இவ்வழக்கு தற்பொழுது கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது.

**669/08/M - மாவட்ட நீதிமன்றம், நுகேகொட**

**- எஸ். எம். எம். சேனாநாயக்க**

வெளிநாட்டு புலமைப்பரிலில்களுக்காக, பெற்றுக் கொண்ட ரூபா. 876,235.36 ஆகிய தொகை நிறுவகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு 2013.08.06 ஆந் திகதி அழைக்கப்பட்டபோது இவ் உத்தியோகத்தர் இத்தொகையினை 05 வருடங்களில் (60 தவணைகளில்) செலுத்தி முடிப்பதற்கான நீதிமன்றத்தின் இணக்கப்பாட்டுக்கு இணங்கியுள்ளார்.

**தற்போதைய நிலைமை**

மேலே இணங்கப்பட்டவாறு எஸ். எம். எம். சேனாநாயக்க அவர்கள் இத்தொகையில் முதலாம் தவணைத் தொகையாகிய ரூபா. 14,603.93, 18.12.2013 அன்று நிறுவகத்திற்கு செலுத்தியிருந்தார்.

(ஆ) **தொழில் நியாயச் சபை - பீ. ஆர். எம். தயானந்த**

இவரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா. 36,000 ரூபா நிதி மோசடி தொடர்பில் முறையான ஒழுக்காற்று பரிசீலனைகள் நடைபெற்று, அதன்படி குற்றமிழைத்தவராக கருதப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இவரினால் இல. MH/33/208/04 கொண்ட வழக்கு நிறுவகத்திற்கு எதிராக தொடரப்பட்டதுடன் அது தொடர்பிலான வழக்கு தற்பொழுது விசாரணை களுக்குட்படுத்தப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

தற்பொழுது வழக்கு நடைபெற்று வருகின்றது.

**நில்மினி விக்ரமசிங்க**

தேசிய கல்வி நிறுவகத்தின் புத்தகசாலையின் நாளாந்த விற்பனைகளிலிருந்து 2009 ஆம் ஆண்டு ரூபா. 549,772.50 ஆகிய தொகை தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தியமை தொடர்பில் முறையான ஒழுக்காற்று விசாரணைகள் நடைபெற்று அதன் தீர்ப்பிற்கமைய குற்றமிழைத்தவராக கருதப்பட்டு சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அவரால் MH/33/1005/11 ஆம் இலக்கத்தினை கொண்ட வழக்கொன்று நிறுவகத்திற்கு எதிராக தொடரப்பட்டுள்ளது. தற்பொழுது இவ்வழக்கு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றது.

**தற்போதைய நிலைமை**

இவ்வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

**WP/HCCA/MT/12/2012 RA - சிவில் மேல் நீதிமன்றம், கல்கிசை**

**- திருமதி. கே. டி. எல். ராணி**

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட தொலைக்கல்வி ஆசிரியர்க் கல்வி பாடநெறியினை குறித்தவாறு நிறைவு செய்ய முடியாமையினால் பாடநெறி சான்றிதழினை பெற்றுக் கௌர்ள முடியாமையினால் அதனை பெற்றுக் கொள்வதற்காக, நிறுவகத்திற்கு எதிராக மேன்முறையீட்டு

நீதிமன்றத்தில் 11/2007 ஆம் இலக்கத்தை கொண்ட வழக்கினை தாக்கல் செய்ததுடன் அங்கு அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. மீளவும் அவர் அக்காரணத்தைக் காட்டி நுகேகொட மாவட்ட நீதிமனறத்தின் SPL/ 125/09 ஆம் இலக்க வழக்கினை தாக்கல் செய்ததுடன் அங்கும் அவ்வழக்கு நிராகரிக்கப்பட்டது.

அவர் மீளவும் இது பற்றி கல்கிசை சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேலே குறிப்பிட்ட இலக்கத்தில் வழக்கினை தெடர்ந்திருந்தார்.

**தற்போதைய நிலைமை**

அவ் வழக்கின் எழுத்து மூல விளக்கத்தினை 2014 மே மாதம் 28 ஆந் திகதிக்கு முன் ஒப்படைக்கும்படி நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலடைவு

ஏற்றுக் கொள்ள முடியாது. காரணங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

வருடாந்த பரீட்சைகளின் நேர அட்டவணையானது பாடநெறியினை நடாத்தும் அவ்வத்துறையினால் தயாரிக்கப்படும் உத்தேச திகதிகளின் அடிப்படையிலாகும். எவ்வாறாயினும் குறித்துக்காட்டப்பட்ட விரிவுரைகள் நிறைவு செய்யப்படாத காரணத்தினால் பாடநெறிகள் குறித்த காலப்பகுதியில் நிறைவு செய்யப்படாமலும் குறித்த உள்ளக கணிப்பீடுகள் பூர்த்தி செய்யப்படாமையால் அவ்வவ் பாடநெறிகளின் குறித்த துறைகளின் வேண்டுகோளின்படி பரீட்சைகளை ஒத்திவைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும் நுழைவுப் பரீட்சைகளுக்காக வருட ஆரம்பத்தில் தினங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் குறித்த காலத்தில் பாடநெறிகளை நடாத்தும் துறைகளினால் விண்ணப்பங்கள் கோரப்படாமையினால் குறித்த தினங்களில் குறித்த பரீட்சைகள் நடாத்தப்படுவதில்லை. அத்தோடு போதுமான அளவு விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் நுழைவுப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சை மாத்திரம் நடாத்தப்பட்டு குறித்த பாடநெறியின் பதிவுகள் இடம்பெறும். போதுமான அளவு விண்ணப்பங்கள் இல்லாதவிடத்து பரீட்சைகளுக்காக அதிக செலவினங்களை தாங்கிக் கொள்வது தேவையற்றதாகையால் நுழைவுப் பரீட்சைகள் நடாத்தப்படமாட்டாது. அதன்படி கீழ்வரும் தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது.

**பரீட்சைகளை நடாத்துதல்**

**செயற்றிட்ட உதவியாளர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை - 2013**

இது உள்ளக ஊழியர்களுக்கான பரீட்சையாகும். பரீட்சைக்காக நிர்வாகத் துறையினரால் விண்ணப்பங்கள் 2012 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டின் போது கோரப்பட்டிருந்த அதேவேளை பரீட்சையானது 22.12.2012 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

**பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாப் பரீட்சை (1 ஆம் பகுதி) மீள் பரீட்சை**

பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாப் பரீட்சை (1 ஆம் பகுதி) ஜுலை மாதத்தில் நடாத்தப்பட ஒழுங்குகள் செய்யப்பட்டமையால் மேலதிகமாக மீள் பரீட்சை ஒன்றை நடாத்தப்பட வேண்டியதில்லை.

**பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (முழு நேர)**

ஒரே பாடநெறிக்கு முழு நேரம் மற்றும் பகுதி நேரம் என்ற வகையில் இரண்டு பரீட்சைகளை நடாத்துவது அவசியமற்றதாகையால் பரீட்சையொன்று இரு பயில்வு முறைகளுக்கும் நடாத்தப்பட்டது. பாடநெறி முடிவடைந்ததன் பின்னர் 2012.09.11 - 15 ஆம் திகதி வரை பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

